www.Padasalai.Net www.CBSEtips.in

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

# அரையாண்டுப் பொதுத் தேர்வு, டிசம்பர் - 2019

## வகுப்பு 12

பதிவெண்

நேரம்: 3.00 மணி **PART - III - பொருளியல்** மொத்த மதிப்பெண்கள்: 90

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

குறிப்பு: **20×1=20**

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) ஒரு பொருளாதார அமைப்பில் காணப்படுவது
அ) நுகர்வு துறை ஆ) உற்பத்தி துறை
இ) அரசு துறை ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும்

2) ............... சமத்துவத்தின் தந்தை ஆவார்.
அ) ஜே.எம். கீன்ஸ் ஆ) காரல் மார்க்ஸ் இ) ஆடம் ஸ்மித் ஈ) சாமுவேல்சன்

3) முதன்மை துறை என்பது
அ) தொழில் ஆ) வியாபாரம் இ) விவசாயம் ஈ) கட்டடம் கட்டுதல்

4) இந்தியாவில் நிதி ஆண்டு என்பது
அ) ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 ஆ) மார்ச் 1 முதல் பிப்ரவரி 28
இ) ஜூன் 1 முதல் மே 31 ஈ) ஜனவரி 1 முதல் டிசம்பர் 31

5) வேலைவாய்ப்பு பற்றி தொன்மை கோட்பாட்டின் மையக்கருத்து என்பது
அ) ரிக்கார்டோ குறைந்து செல் விளைவு விதி ஆ) மார்ஷல் தேவை விதி
இ) சே அங்காடி விதி ஈ) கீன்ஸ் நுகர்வு விதி

6) மொத்ததேவை (AD) =
அ) I+G+(X-M) ஆ) S+G-I+(X-M) இ) C+I+G+(X-M) ஈ) C+S+T+(X-M)

7) MPC-ஐயும் MPS-ஐயும் கூட்டினால் கிடைப்பது
அ) 1 ஆ) 2 இ) 0.1 ஈ) 1.1

8) ஒரு குறிப்பிட்ட வருவாய் அளவில் நுகர்வு அதிகரித்தால்
அ) மொத்த தேவை உயரும் ஆ) ஏற்றுமதி உயரும்
இ) வரியின் மூலம் வரும் வருவாய் குறையும் ஈ) இறக்குமதி செலவு குறையும்

9) தேக்கவீக்கத்தில் பணவீக்க விகிதத்துடன் இணைந்திருப்பது
அ) தேக்கம் ஆ) வேலைவாய்ப்பு இ) உற்பத்தி ஈ) விலை

10) MV = PT என்ற சமன்பாட்டில் V என்பது
அ) வாணிபத்தின் அளவு ஆ) பணத்தின் சுழற்சி வேகம்
இ) ரொக்கப் பணத்தின் அளவு ஈ) வங்கி மற்றும் கடன் பண அளவு

11) வங்கிகளின் வங்கி என அழைக்கப்படுவது
அ) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா ஆ) நபார்டு
இ) ICICI ஈ) இந்திய ரிசர்வ் வங்கி

12) ஏற்றுமதி நகரம் என்பது
அ) ஏற்றுமதி × இறக்குமதி ஆ) ஏற்றுமதி + இறக்குமதி
இ) ஏற்றுமதி – இறக்குமதி ஈ) பணிகள் ஏற்றுமதி

13) சாதகமான வாணிக சூழலில் ஏற்றுமதி இறக்குமதியைவிட .............. இருக்கும்.
அ) அதிகமாக ஆ) குறைவாக இ) கிட்டத்தட்ட சமமாக ஈ) சமமாக

14) ஐ.பி.ஆர்.டி. இவ்வாறாகவும் அழைக்கப்படுகிறது.
அ) பன்னாட்டு பணநிதியம் ஆ) உலக வங்கி இ) ஆசியான் ஈ) பன்னாட்டு நிதிகழகம்

15) சிறப்பு எடுப்பு உரிமையின் மற்றொரு பெயர்
அ) தாள்தங்கம் ஆ) பங்களவுகள்
இ) தன் விருப்ப ஏற்றுமதி தடைகள் ஈ) இணை மதிப்பு

16) GST இதற்கு சமம்
அ) விற்பனை வரி ஆ) தொழிற் குழும வரி இ) வருமான வரி ஈ) உள்ளாட்சி வரி

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

Scanned by CamScanner

Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

17) வருவாய் செலவு (Revenue Expenditure) வருவாய் வருவாயை விட (Revenue Receipts) அதிகமாக இருந்தால் அது
அ) வருவாய் பற்றாக்குறை ஆ) நிதிப் பற்றாக்குறை
இ) வரவு செலவு பற்றாக்குறை ஈ) அடிப்படைப் பற்றாக்குறை

18) வன அழிவிற்கான முதன்மை காரணம் யாது?
அ) மரம் வெட்டும் தொழில் ஆ) இயற்கை வன அழிவு
இ) நிலத்தை சமப்படுத்துதல் ஈ) தட்பவெப்பநிலை சமப்படுத்துதல்

19) முன்னோக்குத் திட்டத்தின் மற்றொரு பெயர்
அ) குறுகிய கால திட்டமிடல் ஆ) நடுத்தரக்காலத் திட்டமிடல்
இ) நீண்டகாலத் திட்டமிடல் ஈ) இடைக்கால திட்டமிடல்

20) இந்தியாவில் திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு ..............
அ) 1950 ஆ) 1951 இ) 1947 ஈ) 1948

## பகுதி - II

**7×2=14**

குறிப்பு: **எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21) "பொருளாதாரம்" என்பதன் பொருள் யாது?
22) முதலாளித்துவம் என்றால் என்ன?
23) "முழு வேலைவாய்ப்பு" - வரையறுக்கவும்.
24) நுகர்வு நாட்டம் என்றால் என்ன?
25) பொன் திட்டம் என்றால் என்ன?
26) கடன் விநியோகப் பகிர்வு என்றால் என்ன?
27) தடையற்ற வாணிகப் பகுதி என்றால் என்ன?
28) "பூஜ்ய அடிப்படை வரவு செலவுத் திட்டம்" குறிப்பு வரைக.
29) நிதி ஆயோக் பற்றி குறிப்பு வரைக.
30) கீழ்க்கண்ட விவரங்களுக்கு கூட்டுச் சராசரியினை கணக்கிடுக. 6, 8, 10, 6, 5

## பகுதி - III

**7×3=21**

குறிப்பு: **எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

31) செலவு முறை பற்றி ஒரு சிறு குறிப்பு தருக.
32) தொகு அளிப்பை வரைபடம் மூலம் விளக்குக.
33) நீள் பணவீக்கம் பற்றி விளக்குக.
34) பணமதிப்பு நீக்கத்தின் நோக்கங்களை குறிப்பிடுக.
35) மாறுகின்ற பணமாற்று வீதத்தின் பொருள் தருக.
36) சார்க்கின் பணிகளை சுருக்கமாக கூறுக.
37) நவீன அரசின் பணிகள் யாவை?
38) நீர் மாசுக்கான காரணங்கள் யாவை?
39) பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் பொருளாதாரம் சாராத காரணிகள் யாவை?
40) உடன் தொடர்பின் வகையினை தொடர் வரைபடம் (Flow Chart) மூலம் விளக்குக.

## பகுதி - IV

**7×5=35**

குறிப்பு: **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

41) அ) கலப்புப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகளை எடுத்தெழுதுக. (அல்லது)
ஆ) தேசிய வருவாய் கணக்கீட்டில் உள்ள சிரமங்கள் யாவை?

42) அ) சே விதியின் திறனாய்வுகளை எழுதுக. (அல்லது)
ஆ) பெருக்கியின் பயன்கள் மற்றும் கசிவுகளை விவரிக்கவும்.

43) அ) நுகர்வுச் சார்பைப் பாதிக்கிற ஏதேனும் ஐந்து அக மற்றும் புறக் காரணிகளை விளக்குக. (அல்லது)
ஆ) பண அளிப்பினை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

44) அ) இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்கவும். (அல்லது)
ஆ) அயல்நாட்டுச் செலுத்துநிலை சமமின்மையின் வகைகளை விவரிக்கவும்.

45) அ) இந்திய சமூக பொருளாதார மேம்பாட்டில் டபிள்யூ.டி.ஓ-ன் பங்கினை விவாதிக்கவும். (அல்லது)
ஆ) நிதிக் கொள்கைகளின் கருவிகளை எழுதி விளக்கவும்.

46) அ) இயற்கை பண்ணை முறையின் பொதுவான கொள்கைகள் யாவை? (அல்லது)
ஆ) காற்று மாசுபடுதலுக்கான காரணங்கள் யாவை?

47) அ) பல்வேறு வகையானத் திட்டமிடல் வகைகளை விவரிக்கவும். (அல்லது)
ஆ) புள்ளியியலின் இயல்பு மற்றும் எல்லைகளை விளக்குக.

######

Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com
CamScanner